# ஊடக வெளியீடு

## கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (IIP): செப்டெம்பர் 2017

## தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

**தொலைபேசி : 011-2147401 தொ.நகல்: 011-2147412** **நவம்பர் 10, 2017**

வெளியிடப்பட்ட IIP பெறுமதிகளின் படி, திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே.சதரசிங்க, இச்சுட்டெண்ணை வெளியிடுதல் சம்பந்தமான அறிக்கையில் குறிப்பிடுகையில், 2016ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 செப்டெம்பர் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 6.0% ஆல் அதிகரித்துள்ளது. 2017 மற்றும் 2016 செப்டெம்பர் மாதங்களில் முறையே 107.1 மற்றும் 101.6 என கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது அறிவித்துள்ளது.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் நாட்டின் பொருளாதாரம் பற்றிய தரவுகளை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் வெளியிடுதல்களை மேற்கொள்கின்றது. இலங்கைப் பொருளாதாரத்தின் போக்குகளை புரிந்து கொள்ள இந்த பொருளாதாரத் தரவுகளை அரச மற்றும் தொழில் நிறுவனங்கள் பயன்படுத்துவதுடன், பொருளாதார வளர்ச்சியின் இயக்கி பொருளாதார செயல்திறனை மதிப்பிடுவதையும், பொருளாதார கொள்கைகளை உருவாக்கி மதிப்பீடு செய்வதையும் அடையாளம் காட்டுகின்றனர். கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது (IIP) மிக முக்கியமான குறிப்பிட்ட பொருளாதார குறிகாட்டியாக உள்ளதுடன் அதன் முக்கிய நோக்கம் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களை வெளிக்கொணர்வதாகும். இது பொருளாதார அபிவிருத்தியின் திருப்புமுனைகளை ஆரம்ப கட்டத்தில் அடையாளங்காண பயன்படுகின்றது.

**கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (2015=100)**

| மாதம்/ ஆண்டு | சுட்டெண் பெறுமதி |
|---|---|
| செப்டெம்பர் - 2016 | 101.6 |
| செப்டெம்பர் - 2017 | 107.7 |
| வருடத்தின் வருட மாற்றம் (%) | 6.0 |
| 3ஆம் காலாண்டு 2017 | 107.1 |

உற்பத்திக் கைத்தொழில்களில், 2016ஆம் ஆண்டு செப்டெம்பர் மாத உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் 2017 செப்டெம்பர் மாத உற்பத்தியில் 'வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள்', 'அடிப்படை உலோக உற்பத்தி பொருட்கள்', மற்றும் 'அச்சிடுதலும் பதிவு செய்த ஊடகங்களின் மறுஉற்பத்தி' ஆகியவை முறையே 26.1%, 19.7% மற்றும் 16.4% என குறிப்பிடத்தக்க அதிகரிப்பை காட்டும் போது உணவு உற்பத்தியானது 7.3% ஆல் அதிகரிப்பை காட்டுகின்றது.

எனினும், கைத்தொழில் உற்பத்தியில்: 'தளபாடம்', 'பானவகை' மற்றும் 'இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தி' ஆகியன முறையே 14.9%, 13.9% மற்றும் 12.7% வீழ்ச்சியைக் காட்டுகின்றன. உற்பத்திக் கைத்தொழில்களில், 2016ஆம் ஆண்டு மூன்றாம் காலாண்டு உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் **2017 மூன்றாம் காலாண்டு** உற்பத்தி 3.9% ஆல் அதிகரிப்பைக் காட்டுகின்றது.

2017 செப்டெம்பர் மாதத்தின் மாதாந்த, கைத்தொழிற் சுட்டெண் பற்றிய மேலதிக விபரங்களுக்கு www.statistics.gov.lk/Industries இணையத்தை பார்க்குமாறு திணைக்களம் தெரிவித்துள்ளது.